கோயம்பேடு – ஆலந்தூர் இடையே Dinathanthi 22-04-15

# மெட்ரோ ரெயில் இயக்குவது குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும்

## ஆய்வு பணிகளில் முழு திருப்தி என்று பாதுகாப்பு ஆணையர் தகவல்

சென்னை, ஏப்.22–

கோயம்பேடு – ஆலந்தூர் இடையே நடந்து முடிந்துள்ள மெட்ரோ ரெயில் பாதை முழு திருப்தியாக இருப்பதால், பாதுகாப்பு குறித்த ஆய்வு அறிக்கை வரும் 15 நாட்களுக்குள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது, ரெயில் இயக்குவது குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்று பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் கூறினார்.



கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை பார்வையிட்டு பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் வெளியே வந்த போது எடுத்தபடம். அருகில் மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பங்கஜ்குமார் பன்சால்.

### மெட்ரோ ரெயில் சேவை

சென்னையில் வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை 23.05 கிலோ மீட்டர் தூரத்துக்கு முதல் வழித்தடத்திலும், சென்டிரல் முதல் பரங்கிமலை வரை 22.50 கிலோ மீட்டர் தூரத்துக்கு 2–வது வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நடந்து வருகிறது.

இதில் சுரங்கப்பாதையில் 19 ரெயில் நிலையங்களும், உயர்த்தப்பட்ட பாதையில் 13 ரெயில் நிலையங்கள் உள்பட 32 ரெயில் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன.

### பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

இந்த மார்க்கத்தில் உள்ள கோயம்பேடு, கோயம்பேடு பஸ்நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுதாங்கல், ஆலந்தூர் ஆகிய 7 ரெயில் நிலையங்களில் போக்குவரத்தை தொடங்குவதற்காக, பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் தன்னுடைய குழுவினருடன் இணைந்து கடந்த 6–ந்தேதி முதல் கட்டமாக ஆய்வு செய்தார். அதற்கான 5 பக்க ஆய்வறிக்கையை மத்திய அரசுக்கும், ரெயில்வே துறைக்கும் அனுப்பினார்.

தொடர்ந்து கடந்த 20–ந்தேதி 2–ம் கட்டமாக பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் தன்னுடைய குழுவினருடன் கோயம்பேடு முதல் அசோக்நகர் வரை டிராலியில் சென்று ஆய்வு செய்தார். சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகளும் உடன் சென்றனர். தொடர்ந்து பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் உள்பட 3 பேர் கொண்ட குழுவினர் நேற்று காலை 10½ மணி அளவில் கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிறுவன தலைமை அலுவலகத்துக்கு வந்தனர். அவர்களை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பங்கஜ்குமார் பன்சால் பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்.

### பணியில் திருப்தி

பின்னர் கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிறுவன தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ரெயில்கள் இயக்குவதற்கான கட்டுப்பாட்டு அறை, ரெயில்கள் நிறுத்தப்படும் இடங்கள் மற்றும் அலுவலகம் முழுவதும் பாதுகாப்பு குழுவினர் சுற்றி பார்வையிட்டனர். பின்னர் அதிகாரிகளிடம் ஆணையர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் நிருபர்களிடம் பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டல் கூறும் போது, "கோயம்பேடு ஆலந்தூர் மார்க்கத்தில் 2 கட்டமாக இறுதி கட்ட ஆய்வு செய்யப்பட்டு உள்ளது, இதில் முதல் கட்டமாக பயணிகளுக்கான மெட்ரோ ரெயில் குறித்து ஆய்வு செய்யப்பட்டதில் தற்போது திருப்தி ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து முதல் கட்ட ஆய்வறிக்கை மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. தொடர்ந்து 2–வது கட்ட ஆய்வு கோயம்பேடு முதல் அசோக்நகர் வரை டிராலியில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. இதுகுறித்து பாதுகாப்பு ஆணையர் குழுவில் இடம் பெற்றவர்களிடம் ஆலோசனை செய்து ஒரு வார காலம் அல்லது 15 நாட்களில் மத்திய அரசிடம் பாதுகாப்பு அறிக்கை வழங்கப்படும். அதற்கு பிறகு ரெயில் இயக்குவது குறித்து மத்திய அரசு முறைப்படி விரைவில் அறிவிப்பு வெளியிடும்'' என்றார்.

பின்னர் பாதுகாப்பு ஆணையர் சதீஷ்குமார் மிட்டலிடம், நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:–

### ஆய்வு பணிகள் நிறைவு

கேள்வி:– கோயம்பேடு – ஆலந்தூர் இடையே ஆய்வு பணிகள் முழுவதும் நிறைவடைந்துவிட்டதா?

பதில்: "ஆய்வு பணிகள் நிறைவடைந்துவிட்டது. 15 நாட்களுக்குள் ஆய்வறிக்கை மத்திய அரசுக்கு தாக்கல் செய்யப்படும்.

கேள்வி:– இறுதிகட்ட சோதனையில் எந்த அம்சங்கள் இடம் பெற்றன?

பதில்:– இந்த சோதனையில் ரெயில் தண்டவாளங்கள், வழித்தட வரைபடம், கட்டிடங்கள் மற்றும் பயணிகளுக்கான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ஆய்வு செய்யப்பட்டன.

### மத்திய அரசு அறிவிப்பு

கேள்வி:– மெட்ரோ ரெயில் பணியில் உங்களுக்கு திருப்தி ஏற்பட்டுள்ளதா? எப்போது பயணிகள் ரெயில் சேவையை தொடங்குவீர்கள்?

பதில்:– ரெயில்கள் சோதனையிட்டதில் திருப்தி ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து 2–வது கட்ட ஆய்வறிக்கையும் விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. எங்களுடைய பாதுகாப்பு குறித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு தான் முடிவை அறிவிக்கும்.

கேள்வி:– மெட்ரோ ரெயில் இயக்குவதில் காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன?

பதில்:– என்னுடைய பணி மெட்ரோ ரெயில் பாதுகாப்பாக உள்ளதா? இந்த வழித்தடத்தில் பயணிகள் ரெயில் இயக்கலாமா? என்பது குறித்து ஆய்வு செய்வது தான். என்னுடைய ஆய்வு பணி தற்போது முழுமையாக முடிவடைந்து உள்ளது. திட்டம் காலதாமதம் ஆவது குறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகளிடம் தான் கேட்க வேண்டும்.

கேள்வி:– தமிழக முதல் –அமைச்சரை சந்தித்து ஆலோசனை நடத்துவதாக திட்டம் உள்ளதா?

பதில்:– அதுபோன்ற எந்த திட்டமும் இல்லை.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.